**OS No.49/2024**

PW 1 – பரமேஸ்வரி

நாள் 06.11.2025

**வா.சா.1 அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு அவரை பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி செய்யப்படுகிறார்.**

நான் தாவா சொத்திற்கு அருகில் உள்ள வீட்டை கிரயம் வாங்கியுள்ளேன் என்றால் நான் வாங்கவில்லை என் அம்மா வீடு. தாவா சொத்து சம்பந்தமாக முத்து ஆசாரியின் பெண் வாரிசுகள் மானாமதுரை சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்த அசல் வழக்கு எண் 49/2024 பாகப்பிரிவினை வழக்கில் இந்த வழக்கின் பிரதிவாதி சுமார் 20 வருடங்களுக்கு மேல் குடியிருந்து வருகிறார் என பாகப்பிரிவினை வழக்கின் பிராதில் குறிப்பிட்டு சொல்லியுள்ளார் என்றால் சரியல்ல.

தாவா சொத்தின் பிரதிவாதியுடன் முத்துஆசாரியின் மகள் பெண் வாரிசு சுலோசனா குடியிருந்து வருகிறார் என்றால் சரியல்ல. நீங்கள் இநத வழக்கில் சுலோசனாவைத்தான் 1 ம் பிரதிவாதியாக சேர்த்து வழக்கு தாக்கல் செய்திருக்க வேண்டும் நீதிமன்றத்தில் சுலோசனா குடியிருந்து வருவதாக மறைத்து தெரிவித்தால் வழக்கில் நீங்கள் கேட்கக்கூடிய பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

முத்து ஆசாரி மகள் சுலோசனா தாவாசொத்தில் பாகபிரிவினைக்கு உரிய அசல் வழக்கு எண் 49/2024 வழக்கு நிலுவையில் இருப்பதால் நீங்கள் தாவா வழக்கில் கேட்கக்கூடிய பரிகாரம் கிடைக்கக்கூடியதல்ல என்றால் சரியல்ல. தாவா சொத்தில் முத்து ஆசாரி மகள் சுலோசனா தான் குடியிருந்து வந்ததால் அவர்களை இந்த வழக்கில் கட்சிகாரராக சேர்க்காததால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும்

என்றால் சரியல்ல.

வழக்கு நிலுவையில் இருந்து வருகையில் தாவா சொத்தில் குடியிருந்து வந்த பிரதிவாதியை அடிஆட்கள் பத்து நபர்களை அழைத்துக்கொண்டு வீட்டிற்குள் அத்துமீறி உள்ளே நுழைந்து அடித்தும், மண்டையை உடைத்து, தலவாட பொருட்கள் மற்றும் கதவு சுவரை ஆகியவற்றை உடைத்ததற்கு மானாமதுரை காவல் நிலையத்தில் முதல் தகவல் அறிக்கை உங்கள் மீதும் அவர்கள் மீதும் பதியப்பட்டது என்றால் சரியல்ல.

அசல் வழக்கு எண் 49/2024 பாகப்பிரிவினை வழக்கு மானாமதுரை சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்த பின்னீடு தான் நீங்கள் உங்கள் பெயரில் வீட்டு வரி சட்டத்திற்கு புறம்பாக மாற்றிக்கொண்டீர்கள் என்றால் சரியல்ல. வழக்கு தாக்கல் செய்த பின்பு வழக்கு தோதிற்காக ஆவணங்களை உற்பத்தி செய்ய மின் இணைப்பு உள்ளிட்டவற்றை உங்கள் பெயரில் மோசடியாக மாற்றிக்கொண்டீர்கள் என்றால் சரியல்ல.

தமிழ்நாடு அரசின் இலவச மின்சாரம் அறிவித்ததில் இருந்து எந்தவித மின் கட்டணமும் செலுத்தவில்லை என்று சொன்னால் செலுத்தியுள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலம் மற்றும் பிராதில் மின்சார கட்டணம் செலுத்தி வருகிறேன் என்று கூறியுள்ளது வழக்கிற்காக பொய்யாக கூறியுள்ளேன் என்றால் சரியல்ல.

நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலம் மற்றும் பிராதிலும் பிரதிவாதி வாடகைக்கு குடியிருந்து வருவதாக சொல்லியுள்ளேன் அதற்கான ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வாடகை ஒப்பந்த சட்த்தின் படி மனு

தாக்கல் செய்யாததால் இந்த பிராது தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

தாவா சொத்தை நீங்கள் கிரயம் வாங்கிய முன்கிரயம் மற்றும் தானம் வாங்கிய பாத்தியதாரர்களோ நீங்களோ எக்காலத்திலும் தாவா சொத்தை அனுபவித்து வரவில்லை என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதி 20 வருடசட்ட காலத்தில் இருந்து குடியிருந்து வருகிறார் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

–Sd –
Taken down by me in open court
readover/interpreted to the witness in Tamil and
acknowledged by him/her to be correct.

–Sd –
District Munsif,
Manamadurai.